வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 54/2022

வழக்கு சாட்சி LW5 / PW6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌந்தராஜன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | அப்பாண்டை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 54 |

தேதி 13.05.2025

1வது எதிரி ஆஜர். 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் புழல் பகுதியில் குடியிருந்து வருகிறேன். நானும் அ.சா.1 சர்வலிங்கமும் ஒன்றாக வேலை பார்த்து வருகிறோம். ஆஜர் எதிரியை நான் இரண்டு பார்த்துள்ளேன். ஆஜர் எதிரி சர்வலிங்கத்திடம் எங்களது கம்பெனி வாசலில் வந்து அட்டை கொடுத்துவிட்டு பணம் பெறுவதையும், ஒரு தடவை சர்வலிங்கம் என்னையும் அழைத்துக்கொண்டு ஆஜர் எதிரி வீட்டிற்கு சென்று பணம் அளித்தபோதும், உடன் சென்று பார்த்தேன். சர்வலிங்கம் ஆஜர் எதிரியிடம் சீட்டு பணம் போடுவதாக என்னிடம் கூறினார். பின்னர் பணத்தினை தராமல் இருப்பதாகவும், மிரட்டியதாகவும் கூறினார். அவர் புகார் அளித்ததில் போலீசார் என்னை அழைத்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு ஆஜர் எதிரி விலாசம் தெரியுமா என்றால் தணிக்காசலம் நகர் சரியான முகவரி தெரியாது. பணம் அளிக்கும்போது பார்த்தேனா என்றால் பார்த்தேன். என்ன பணம் என்றால் சீட்டு பணம். சீட்டு பணம் என யார் கூறினார்கள் என்றால் சர்வலிங்கம் நான் அட்டையையும் பார்த்தேன். அட்டையில் கையொப்பம் இருந்ததா என்றால் அதைநான் கவனிக்கவில்லை. எப்போதிலிருந்து சர்வலிங்கம் எனக்கு பழக்கம் என்றால் 1992ல் இருந்துபழக்கம். நான் சீட்டு ஏலம் விடும்போது பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சர்வலிங்கம் கூறிதான் எனக்கு

குணசேகரன் சீட்டு நடத்தியது தெரியும் என்றால் நான் பணம் அளிக்கும்போது பார்த்துள்ளேன். மற்ற விபரங்கள் எனக்கு சர்வலிங்கம் கூறிதான் தெரியும். நான் 1992ல் இருந்து பழக்கம என்பதால் சர்வலிங்கத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**